**தொகுதி 3 – வரவுசெலவுத் திட்டமிடல் (பட்ஜெட்டிங்)** **செயற்பாட்டுத் தாள் 3-1 ‘ B’ வார்த்தை – பட்ஜெட்**

குழு உருவாக்கிய மற்ற யோசனைகளை, விசேஷமாக உங்களது சூழ்நிலைக்கு பொருந்துகிற யோசனைகளை எழுதி வையுங்கள்.

| வரவுசெலவுத் திட்டம் என்றால் என்ன? | ஏன் வரவுசெலவுத் திட்டமிடவேண்டும்? |
|---|---|
| • உங்கள் பணத்தை கண்காணிப்பதற்கான ஒரு வழி.<br>• ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் வருமானம் (எவ்வளவு பணம் உள்ளே வருகிறது) மற்றும் செலவுகள் (எவ்வளவு பணம் வெளியே போகிறது) என்பனவற்றின் சுருக்கம்.<br>• உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறது, உங்களுக்கு எவ்வளவு பணம் தேவைப்படுகிறது, எதற்காக நீங்கள் உங்கள் பணத்தை செலவழிக்கிறீர்கள் என்பனவற்றைக் காட்டும் ஒரு கருவி.<br>• உங்கள் பணத்தை நிர்வகிக்க உதவும் ஒரு திட்டம் மற்றும் எதிர்காலத்திற்கான ஒரு திட்டம். | • உங்கள் பணத்தை எதற்காக செலவழிக்கிறீர்கள் என்பதைப் பற்றி இன்னும் விழிப்பாக இருங்கள்.<br>• எ ந்தப் பகுதிகளில் நீங்கள் குறைவாக செலவழித்துப் பணத்தை சேமிக்கலாம் என்பதைக் கண்டுபிடியுங்கள்.<br>• உங்கள் நிதிவிவகாரங்களை கட்டுப்பாட்டுக்குள் எடுத்து மேலும் தன்நம்பிக்கையுள்ளவராக உணருங்கள்.<br>• பில்களுக்கான பணத்தை சரியான நேரத்தில் செலுத்தி காலதாமதமத்திற்கான கட்டணத்தைத் தவிர்த்திடுங்கள். பணம் சம்பந்தமான மன அழுத்தத்தைக் குறையுங்கள்.<br>• உங்கள் கடனைக் குறையுங்கள் அல்லது செலுத்தி முடியுங்கள்.<br>• நடுத்தர மற்றும் நீண்டகால இலக்குகளுக்காக சேமியுங்கள் (விடுமுறையில் செல்வது, பள்ளிக்கூடசெலவு, வீடு வாங்குதல், ஒய்வுபெறுதல் போன்றவற்றிற்காக)<br>• நீங்கள் மிக முக்கியமென கருதுகிறவற்றிற்கு செலவழிக்க அதிக பணத்தை வைத்திருங்கள்! |